**ஜனவரி – 24**


# TNPSC துளிகள்

- தொழில்துறை சார்ந்த சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக பாரீஸ் ஒப்பந்தத்தின் கீழ் 'காதி' வகைக்கு ஒரு சர்வதேச வர்த்தக முத்திரையைப் பெறுவதற்காக காதி கிராமத் தொழில் துறைக் கழகமானது நடவடிக்கை எடுத்து வருகின்றது.
    - பாரீஸ் ஒப்பந்தமானது உலக அறிவுசார் சொத்துகள் அமைப்பால் (WIPO - World Intellectual Property Organization) நிர்வகிக்கப் படுகின்றது.
- ஜனவரி 26 ஆம் தேதி முதல் அனைத்துப் பள்ளிகளிலும் அரசியலமைப்பின் முகவுரையை வாசிக்கச் செய்வதை மகாராஷ்டிரா மாநில அரசு கட்டாயமாக்கியுள்ளது.
    - அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள நீதி, சுதந்திரம் மற்றும் சமத்துவம் போன்ற மதிப்புகளை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.

# தேசியச் செய்திகள்

## ரோகிணி ஆணையத்தின் பணிக் காலம் நீட்டிப்பு

- ஓய்வுபெற்ற நீதிபதி ஜி. ரோஹிணி தலைமையின் கீழ் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான (Other Backward Classes - OBCs) துணை வகைப்படுத்துதல் ஆணையமானது 2017 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதியன்று அரசியலமைப்பின் 340வது பிரிவின் கீழ் இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் அமைக்கப் பட்டுள்ளது.
- மத்தியப் பட்டியலில் உள்ள இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குள் துணை வகைப்படுத்துதல் குறித்தப் பிரச்சினையை ஆராய இது அமைக்கப் பட்டுள்ளது.
- இது மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.
- இந்த ஆணையமானது தனது பதவிக் காலத்தை 6 மாதங்களுக்கு, அதாவது 2020 ஆம் ஆண்டு ஜூலை 31 வரை நீட்டிக்க கோரிக்கை விடுத்துள்ளது.




- OBCகளுக்கான மத்தியப் பட்டியலில் உள்ள விளிம்பு நிலைச் சமூகங்களின் நலனுக்காக இந்த ஆணையமானது பரிந்துரைகளை வழங்க உள்ளது.
- OBCகளின் துணை வகைப்படுத்துதலானது OBC சமூகங்களிடையே மிகவும் பின்தங்கிய

நிலையில் உள்ளவர்கள் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசுப் பணிகள் ஆகியவற்றிற்கான இடஒதுக்கீட்டின் நன்மைகளைப் பெற முடியும் என்பதை உறுதி செய்ய இருக்கின்றது.

- ❖ எனவே, மத்திய அரசு தற்பொழுது சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலைகளின் அடிப்படையில் பின்தங்கிய வகுப்பின் கீழ் வரும் சாதிக் குழுக்களை மேலும் வகைப்படுத்துவதன் மூலம் இடஒதுக்கீட்டுச் சலுகைகளை இன்னும் சமமாக வழங்கப் படுவதை உறுதி செய்ய முயல்கின்றது.
- ❖ தற்போதைய நிலையில் துணை வகைப்படுத்துதலானது அறவே இல்லை. 27% இட ஒதுக்கீடானது ஒரே சீரான இடஒதுக்கீடாகவே உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## WEF கூட்டம்

- ❖ உலகப் பொருளாதார மன்றமானது (World Economic Forum - WEF) தனது 50வது வருடாந்திரக் கூட்டத்தை சுவிட்சர்லாந்தின் டாவோஸில் தொடங்கியது.
- ❖ இந்த ஆண்டின் இந்தக் கூட்டமானது அடுத்தப் பத்தாண்டுகளில் 1 டிரில்லியன் மரங்களை நடவு செய்யும் தனது முயற்சியின் மீதும் 1 பில்லியன் மக்களை நான்காவது தொழில்துறை புரட்சியுடன் இணைப்பதின் மீதும் கவனம் செலுத்த இருக்கின்றது.
- ❖ இணைய வழிக் குற்றங்களில் கடவுச் சொற்களின் பங்கு குறித்த ஒரு அறிக்கையை இந்த மன்றமானது வெளியிட்டுள்ளது.
- ❖ உலகப் பொருளாதார மன்றமானது 2006 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தினால் (UNEP - United Nations Environment Programme) தொடங்கப்பட்ட "டிரில்லியன் மரங்களுக்கான பிரச்சாரம்" என்ற திட்டத்தில் "பில்லியன் மரங்களுக்கானப் பிரச்சாரம்" என்ற வகையில் இணைந்துள்ளது.
- ❖ 2011 ஆம் ஆண்டில், இந்தத் திட்டமானது "பிளான்ட் ஃபார் தி பிளானட்" (ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனம்) என்ற ஒரு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.




### *மீண்டும் திறன் அளித்தல் (Reskilling)*

- ❖ உலகப் பொருளாதார மன்றத்தில் தொடங்கப்பட்ட "மீண்டும் திறன் அளித்தல்" என்ற ஒரு புரட்சிகரமான முயற்சியில் இந்தியா நிறுவன உறுப்பினராக இணைந்துள்ளது.

- இது நான்காவது தொழில்துறைப் புரட்சியால் அறிமுகப்படுத்தப்படும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ள உலக நாடுகளின் பொருளாதாரங்களுக்கு உதவுகின்றது.
- அமெரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம், ரஷ்யா, பாகிஸ்தான், பிரான்சு மற்றும் பிரேசில் ஆகியவை இந்த முயற்சியின் மற்ற நிறுவன உறுப்பினர் நாடுகளாகும்.
- மீண்டும் திறன் அளித்தலை அடைவதற்காக, உலகப் பொருளாதார மன்றமானது "எதிர்காலப் பணிகள்: புதிய பொருளாதாரத்தில் விவரமாக்கல் வாய்ப்புகள்" என்ற ஒரு அறிக்கையையும் வெளியிட்டுள்ளது.
- நான்காவது தொழில்துறைப் புரட்சி என்பது ரோபோடிக்ஸ் (எந்திரனியல்), இணையங்களுக்கான பொருள்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றின் மூலம் உலகெங்கிலும் உள்ள மக்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கக் கூடிய வகையில் ஒரு மேம்படுத்தும் சூழல் அமைப்பாகும்.
- நான்காவது தொழில்துறைப் புரட்சி இயந்திரத்தால் இயக்கப்படும் எந்திர மயமாக்கத்தை அதிகரித்துள்ளது. இது இந்தப் பணியில் பங்கெடுத்துள்ள தொழிலாளர் சக்தியை உருமாற்றி அமைத்துள்ளது.

***காலநிலை அறிவியல்***

- WEF காலநிலை அறிவியல் குறித்த தனது கருத்துக் கணிப்பையும் வெளியிட்டுள்ளது.
- இந்த ஆய்வின் படி, இந்தியாவும் வங்கதேசமும் காலநிலை அறிவியலில் மிகவும் நம்பிக்கை கொண்ட நாடுகளாக உள்ளன.
- அதே வேளையில், காலநிலை அறிவியல் பற்றி தங்களை மேம்படுத்திக் கொள்வதில் உக்ரைனும் ரஷ்யாவும் மிகவும் பின்தங்கியுள்ளன.
- இந்த உலகமானது காலநிலை அறிவியல் மீதான தனது நம்பிக்கையை இழந்து விட்டதாக இந்த அறிக்கை கூறுகின்றது.
- இந்த ஆய்வின் படி, புவி வெப்பமடைதலானது முக்கியமாக மனித நடவடிக்கைகளால் ஏற்படுகின்றது என்று உலகம் நம்புகின்றது.
- 2020 ஆம் ஆண்டின் இந்த ஆய்வின் கருப்பொருள்: “மேலும் நிலையான உலகத்தை நோக்கி மற்றும் இன்னும் ஒத்திசைவான உலகத்தை நோக்கி” என்பதாகும்.

## சர்வதேசக் காவல்துறை அறிவிப்பு

- தப்பியோடிய சர்ச்சைக்குரிய சாமியாரான நித்யானந்தாவைக் கண்டுபிடிப்பதற்காக சர்வதேசக் காவல்துறையானது ப்ளூ கார்னர் வகை அறிவிப்பை (நீல நிற அறிவிப்பு) வழங்கியுள்ளது.
- இந்த அறிவிப்புகள் என்பது ஒத்துழைப்பிற்கான சர்வதேச கோரிக்கைகள் அல்லது உறுப்பு நாடுகளில் உள்ள காவல் துறையினர் முக்கியமான குற்றங்கள் தொடர்பான தகவல்களைப் பகிர அனுமதிக்கும் எச்சரிக்கைகளாகும்.
- சிவப்பு அறிவிப்பு, மஞ்சள் அறிவிப்பு, நீல அறிவிப்பு, கருப்பு அறிவிப்பு, பச்சை அறிவிப்பு, ஆரஞ்சு அறிவிப்பு மற்றும் ஊதா அறிவிப்பு என ஏழு வகையான அறிவிப்புகள் உள்ளன.
- "ஒரு குற்றம் தொடர்பாக ஒரு நபரின் அடையாளம், இருப்பிடம் அல்லது செயல்பாடுகள் பற்றிய கூடுதல் தகவல்களைச் சேகரிப்பதற்காக" நீல வண்ண அறிவிப்பு வெளியிடப் படும்.
- சிவப்பு நிற அறிவிப்பானது தேடப்பட்டு வரும் ஒரு நபரைக் கைது செய்வதற்காக வழங்கப் படுகின்றது.
- சர்வதேச குற்றவியல் காவல்துறை அமைப்பு அல்லது சர்வதேசக் காவல் துறையானது 194 உறுப்பு நாடுகளைக் கொண்ட அரசுகளுக்கிடையேயான ஒரு அமைப்பு ஆகும்.

இதன் தலைமையகம் பிரான்சின் லியானில் அமைந்துள்ளது.

- இது 1923 ஆம் ஆண்டில் சர்வதேச குற்றவியல் காவல்துறை ஆணையமாக உருவாக்கப் பட்டது. மேலும் 1956 ஆம் ஆண்டில் தன்னை சர்வதேசக் காவல்துறை என்று அழைக்கத் தொடங்கியது.




# பொருளாதாரச் செய்திகள்

## SERVICE திட்டம்

- SERVICE என்பது அதன் ஊழியர்களால் தன்னார்வத் தொண்டு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக இந்திய எஃகு ஆணையத்தின் (Steel Authority of India - SAIL) ஒரு திட்டமாகும்.
- இந்தத் திட்டத்தை மத்திய எஃகு துறை அமைச்சகம் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது "SAIL ஊழியர்களால் வழங்கப்படும் தன்னார்வ மற்றும் சமூக ஈடுபாட்டிற்கான முயற்சிகள்" (SERVICE - AIL Employee Rendering Voluntarism and Initiatives for Community Engagement) என்று அழைக்கப்படும்.
- இது சமூக நலனில் பங்களிப்பதன் மூலம் நிறுவனத்தின் மூன்று அடிமட்ட நிலையை (triple bottom line - TBL) மேம்படுத்துவதற்குப் பங்களிக்க இருக்கின்றது.
- TBL என்பது சமூகம், சுற்றுச்சூழல் மற்றும் நிதி ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்ட ஒரு கணக்கியல் கட்டமைப்பாகும்.

## உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்டப் போக்குகள் 2020

- ஐக்கிய நாடுகள் சர்வதேச தொழிலாளர் அமைப்பானது (World Employment and Social Outlook Trends - WESO) ஆண்டுதோறும் உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூக கண்ணோட்டப் போக்குகள் என்ற ஒரு அறிக்கையை வெளியிடுகின்றது.
- இந்த அறிக்கையானது வேலையின்மை, தொழிலாளர் பற்றாக்குறை, உழைக்கும் தொழிலாளர்களின் வறுமை நிலை, வருமான சமத்துவமின்மை, தொழிலாளர் வருமானப் பங்கு மற்றும் மக்களை நிலையான வேலையிலிருந்து விலக்கும் காரணிகள் உள்ளிட்ட முக்கியமான தொழிலாளர் சந்தைப் பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்கின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கிழக்கு ஆசிய மைய ஆய்வகக் கூட்டமைப்பு

- பெரிய தொலைநோக்கிகளைக் கட்டமைப்பதற்காக உறுதி பூண்டுள்ள எட்டு நாடுகளைக் கொண்ட கிழக்கு ஆசிய மைய ஆய்வகக் கூட்டமைப்பின் ஒரு பகுதியாக இணைய இந்தியாவானது தொடக்க நிலை விவாதங்களில் ஈடுபட்டுள்ளது.
- ஹவாயில் நடைபெற இருக்கும் மௌனாகியா உச்சி மாநாட்டில் ஜேம்ஸ் கிளார்க் மேக்ஸ்வெல் சப்மில்லிமீட்டர் தொலைநோக்கியின் (James Clerk Maxwell Submillimetre Telescope - JCMT) செயல்பாட்டை ஏற்றுக் கொள்வதே இதன் முதல் பணியாகும்.
- இது சீனா, ஜப்பான், தைவான், கொரியா ஆகிய நாடுகளை முழு உறுப்பினர் நாடுகளாகவும் தாய்லாந்து, வியட்நாம், மலேசியா மற்றும் இந்தோனேசியா ஆகியவற்றைப் பார்வையாளர் நாடுகளாகவும் கொண்டுள்ளது.
- இந்தக் குழுவில் இந்தியா சேர்வது என்பது புதிய கருந்துளைகளைக் கண்காணிப்பதற்காகவும் அண்ட நிகழ்வுகளில் கவனத்தைச் செலுத்துவதற்காகவும் உதவக் கூடிய வகையில் திபெத்தில் முன்மொழியப் பட்ட தொலைநோக்கி உள்ளிட்ட புது வகையான தொலைநோக்கிகள் நிறுவுவதைக் குறிக்கும்.

## வியோம் மித்ரா

- இஸ்ரோ நிறுவனமானது ககன்யான் திட்டத்திற்காக ஒரு சோதனை முயற்சியாக “வியோம் மித்ரா” என்று அழைக்கப்படும் ஒரு அரை மனித ரோபோவை விண்வெளிக்கு அனுப்ப உள்ளது.
- வியோம் மித்ரா என்றால் விண்வெளித் தோழி என்று பொருள்படும்.
- இது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இஸ்ரோவின் ஜிஎஸ்எல்வி III விண்கலத்தின் மூலம் ஆளில்லா விமானப் பயணம் மூலமாகச் செலுத்தப்பட இருக்கின்றது. இது 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இரண்டாவது ஆளில்லா விமானப் பயணம் மூலமாகச் செலுத்தப்பட இருக்கின்றது.
- இந்த அரை மனித ரோபோவானது இந்தி மற்றும் ஆங்கிலம் என இரண்டு மொழிகளிலும் பேசும் திறன் கொண்டது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஹைட்ரோகுளோரோஃப்ளூரோகார்பன் (HCFC) -141 பி

- ஹைட்ரோகுளோரோஃப்ளூரோகார்பன் (hydrochlorofluorocarbon - HCFC) 141 பி என்பதன் பயன்பாட்டை இந்தியா முழுமையாக நீக்கியுள்ளது.
- இது நுரை உற்பத்தியாளர்களால் பயன்படுத்தப்படும் ஒரு வேதிப் பொருளாகும்.
- இது விறைப்பான பாலியூரிதீன் (rigid polyurethane - PU) நுரைகளின் உற்பத்தியில் வீசப்படுகின்ற ஒரு முக்கியமானப் பொருளாக பயன்படுத்தப் படுகின்றது.
- மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி முதல் HCFC-141bக்கான இறக்குமதி உரிமத்தை வழங்குவதைத் தடை செய்யும் ஒரு அரசு அறிவிப்பையும் வெளியிட்டுள்ளது.
- இது சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986ன் கீழ் வெளியிடப்பட்ட ஓசோனைப் பாதிக்கும் பொருட்கள் (ஒழுங்குமுறை மற்றும் கட்டுப்பாடு) திருத்த விதிகள், 2019ன் கீழ் வெளியிடப் பட்டுள்ளது.
- நாட்டில், ஓசோனைப் பாதிக்கும் இரசாயனங்களின் 50% நுகர்விற்கு நுரைத் துறையில் காணப்படும் HCFC - 141 பி என்ற வேதிப் பொருள் காரணமாக இருக்கின்றது.
- வென்னீர் கொதிகலன்கள், குளிர்சாதனப் பெட்டிகள், வெப்பம் சார்ந்த பொருட்கள், மரச்சாமான் உபகரணங்கள், வணிகம் சார்ந்த குளிரூட்டல் போன்ற பயன்பாடுகளில் பாலியூரிதீன் பயன்படுத்தப் படுகின்றது.
- நுரை சார்ந்த துறையில் நாட்டிலிருந்து HCFC 141பி என்பதின் முழுமையான நீக்கமானது மான்ட்ரீல் நெறிமுறையின் கீழ் உள்ள சரத்து 5 (வளரும் நாடுகள்) நாடுகளிடையே முதலாவது இடத்தில் உள்ளது.
- நாட்டிலிருந்து HCFC -141 பி என்பதன் முழுமையான நீக்கமானது அடுக்கு மண்டல ஓசோன் அடுக்கைப் பாதுகாக்க உதவுதல் மற்றும் காலநிலை மாற்றத்தைக் குறைத்தல் ஆகிய இரட்டை சுற்றுச்சூழல் நன்மைகளைக் கொண்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★